# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல் : 22 யாழ்ப்பாணம் செப்ரெம்பர் 1998




# யூபிலி ஒரு போராட்டம்

## ஆசிரியருரை:-

இரண்டாயிரம் ஆண்டு யூபிலிக் கொண்டாட்டத்திற்கு நிறுவனத் திருச்சபையினர் தலத்தில், தடல்புடல் ஆயத்தங்கள் செய்கின்றனர். யேசு தன் யூபிலியை வெறும் கொண்டாட்டமாக பிரகடனம் செய்யவில்லை. நல்லவர் எவரும் இருக்காத நசரேத்தில் நின்று அதை ஓர் போர்ப்பிரகடனமாக்கினார். (காண். யோவா 2 : 13 - 22)

''ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.'' (லூக் 4; 18 - 19)

.எளியோருக்கு நற்செய்தி அறிவிப்பது ஓர் உயர், மத்திய வர்க்க - பண, பல, பாதுகாப்புப்போர்வை அணிந்த சபையினர்க்கு, போராட்டம் நிறைந்த அலுவல் அல்லவா?

''ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்.'' (பிலி. 2;7)

சபை ஏழ்மை வடிவம் பூண்டு, பொருள் பலம் பாதுகாப்பிழந்தோருடன் நின்று தான் யூபிலியை அனுசரிக்க முடியும்.

சிறைப்பட்டோர் சங்கிலிகளை அறுக்க, பார்வையற்றவருக்கு உண்மை ஒளிநிறை பார்வை அளிக்க - அன்றாடம் நிகழ்வுகளுக்குள் தன்னை அமிழ்த்தி திருப்தியடையும் பல குருட்டு மக்கள் - அவர்களது பொருள் தேடல்கள், பொழுது போக்குகள் - அதையே கண்முடித்தனமாக தம் பாணியில் திருப்பிச் செய்யும் புத்திஜீவிகள், சமயத்தலைவர்கள், சபைக் குருகுலம் - தன் பார்வையைச் சரிப்படுத்த எவ்வளவோ போராட்டம் தேவை.

ஒடுக்கப்பட்டோரைப் பற்றி நினைக்கவே நேரம் இல்லாத சொகுசுகளும் உலக ஆறுதலைத் தேடும் சபையினரும் வழிகாட்டிகளும் - எத்தனை போர் முழங்கினாலும் அருள் தரும் ஆண்டினை தம் அருள் இடைவெளி இல்லா வாழ்க்கைகளுக்குள் ஏற்படுத்த வேண்டும் ... உண்மையான 2000ம் ஆண்டு யூபிலிக்கு.

நாசரேத்தில் யேசு, ஏசாயாவின் ஏட்டைச் சுருட்டவே, கிண்டல் எழும்பியது. (காண் லூக். 4 : 16 - 30) மலை உச்சியிலிருந்து கீழே தள்ளி கொலை செய்யும் அளவுக்கு எதிர்ப்பு அதிகமாயிற்று. இப்படிப்பட்ட போராட்டத்திற்குத் தம்மை தயார் செய்பவர் எத்தனை பேர்? இது எம்முள், எம் குடும்பத்துள், அயலாருள், ஊருக்குள், எம் மண்ணுள் நடந்தேறவே வேண்டும். மறைமாவட்டத்தின் ஒவ்வொரு பங்கிலும் அன்பியக்குழு அமைப்பு, ஆணைக்குழுக்கள் முதலியவற்றில் நடக்கவேண்டியது. இயேசு அவர்களிடம் ''நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால் உங்களிடம் பாவம் இராது. ஆனால் நீங்கள் எங்களுக்குக் கண் தெரிகிறது என்கிறீர்கள். எனவே நீங்கள் பாவியாகவே இருக்கிறீர்கள்'' என்றார். (யோவா 9 : 41)

கானாவூர் பிரகடனம் யூபிலி அடையாளம்தான் பொங்கிவழிந்த ஆறு சாடி மகிழ்ச்சிதரும் இரசம். ஆனால் அதன் ஆரம்பம், விட்டுத்தொட்டிகளைத் தண்ணீரால் நிரப்புதல்.
(காண் யோவா 2 : 7)

உண்மையாக கொண்டாடவேண்டிய இடம் ஆலயம். ஆயின் அது வியாபார மையம் (காண். யோவா 2 : 13 - 16) எனவே யூபிலிக்கு இடமில்லாது போகிறது. ''என் தந்தையின் இல்லத்தை சந்தை ஆக்காதீர்கள் .....''

''இக் கோவிலை இடித்து விடுங்கள். மூன்று நாளில் எழுப்புவேன்.''
(காண். யோவா 2 : 17 - 22)

யூபிலியை, காலத்தின் அறிகுறிகளை கவனத்தில் எடுக்காமல் கொண்டாட முடியாது. காலங்களின் அறிகுறிகள் எவை?

1. தவறான இறையியல் போதனை. அதனால் அவ விசுவாசம் உண்டாகி கிறிஸ்துவை மறுதலிக்கச் செய்கிறது.

2. போர்கள், உள்நாட்டு சகோதர கொலைகள், கலக்கங்கள், இயற்கையின் சீற்ற அழிவுகள்.

3. யேசுவுக்கும் உண்மைத் திருச்சபைக்கும் பிரமாணிக்கமாக நிற்பவர்களுக்கு எதிர்ப்பும் துன்பக்கலாபனையும்.

4. தேவனின் கோவிலில் புகுந்து, அவர் இடத்தில் வேறொன்றை அமர்த்தி செய்யப்படும் அவசங்கைகள்.

5. வானத்தில் தோன்றும் அறிகுறிகள்.

இவற்றிற்கு எதிராக யேசுவின் ஆவி போராடுகிறார். தேவதாயின் காட்சிகளின் அறிவுரையும் இதுவே.

''கடவுளே! வேற்றுநாட்டினர் உமது உரிமைச் சொத்தினுள் புகுந்துள்ளனர். உமது திருக்கோவிலைத் தீட்டுப்படுத்தியுள்ளனர். எருசலேமைப் பாழடையச் செய்தனர்.''

(4ம் பக்கம் பார்க்க)

# மெக்சிக்கோவில் ஓர் ஏழைக்கு தேவதாயின் காட்சி

ஸ்பானியர் தென் அமெரிக்காவினுள் நுழைந்தபோது இரு பெரிய சாம்ராச்சியங்கள் இருந்தன. மெக்சிக்கோவை ஆண்ட அஸ்ரெக்ஸ், பேருவை அரசாண்ட இன்கா இனத்தவர்கள் தம் சாம்ராச்சியங்களின் கொடுமுடியை அடைந்திருந்தனர். 11ம், 12ம் நூற்றாண்டுகளிலிருந்தே மெக்சிக்கோவை ஆண்ட அவர்கள் முன்னோர் ரொல்ரெக் (Toltec) 13ம் நூற்றாண்டில் வடக்கிலிருந்து வந்திறங்கி தம் தலைநகரைக் கட்டத்தொடங்கினார். 14ம் நூற்றாண்டின் முடிவில் முடியாட்சி. தலைநகர் Tenochtitlan. 15ம் நூற்றாண்டில் முதலாம் மொன்ரெசுமாவின் கீழ் மெக்சிக்கோவின் பெரும் பகுதிகள் அவர்கள் கைவசம் ஆகி முன்னைய மாய சாம்ராச்சியத்தின் எல்லைகளை ஊடுருவத் தொடங்கிற்று.

அவர்களின் குருக்கள், பிரபுக்கள், ஆளுநர்கள் 100,000 பேருக்குத் தேவையான உணவு, உடை, உலோக மட்பாண்டங்களையும் ஏனைய தேவைகளையும் கொடுக்குமாறு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மறுப்பின் பெருந் தண்டனைக்குள்ளாகினர். Huitzilopochtli என்ற அஸ்ரெக்கியரின் தலைத் தெய்வத்திற்கு நரபலி கொடுக்கத் தேவையான மனித உயிர்களைப் பெறுவதற்காக அண்டை மக்களுடன் போர் தொடுக்கப்பட்டது. வருடமொன்றுக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மனித நரபலி கொடுக்கப்பட்டது.

அஸ்ரக் குருக்கள் 32 சென்ரிமீற்றர் நீள, கழுகு வடிவில் ரத்தினங்கள் பதிக்கப்பட்ட கைபிடிகொண்ட கத்திகளைப் பாவித்து, சூரியனுக்கும் பூமிக்கும் பலியிட்ட மனிதர்களின் நெஞ்சுகளைப் பிளந்து துடித்துக்கொண்டிருந்த இருதயங்களைப் பிடுங்கி எடுத்து பலிசெலுத்தினர். இரண்டு மில்லியன் விவசாயிகள் 20.000 தொன் உணவுகளை கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இதனாலேயே பல மக்கள் குழுவினருக்கு 1519ல் ஸ்பானிய தளபதி கேர்னன் கோட்டன் வந்திறங்கியது மகிழ்ச்சிக்குரியதாயிற்று. அஸ்ரெக் சர்வாதிகாரத்தினின்று விடுதலை தருபவனாக அவன் கருதப்பட்டான்.

1509ம் ஆண்டில் அஸ்ரெக் மாமன்னர் 2ம் மொன்ரேசுமாவின் தங்கை இளவரசி பப்பன்ரிசின் நித்திரை மயக்கத்தில் ஒரு காட்சியைக் கண்டான். ஒரு பிரகாசமுள்ள தேவதூதன் நெற்றியில் கறுத்தச் சிலுவையுடன் தோன்றி, அவளை கடற்கரைக்கு கூட்டிவந்து, சமுத்திரத்தில் அவர்களது மண்ணை நோக்கி வந்துகொண்டிருந்த கப்பல்களை காட்டிற்று. அக் கப்பல்களில் விசித்திரமான வெள்ளைப் பாய்களும், அவற்றில் தேவதூதனின் நெற்றியிலிருந்தது போன்ற கறுத்த சிலுவைகளும் காணப்பட்டன. அஸ்ரேக்கரின் கொடுங்கோலாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றும் மக்கள் உண்மை இறைவனின் அறிவைப்பெற்று விடுதலை அடைவர் என்றும் இக் காட்சி உணர்த்தியது.

1487ல் கொலம்பஸ் வருவதற்கு முன்பு, நான்கு நாள் விழாவில் 80.000 மனிதர்கள் இரத்தபலியிடப்பட்டனர். புதிய ஆலய அபிசேகம் 20,000 பேர்களைப் பலிகொள்ளுர்; அவர்கள் தம் இரத்தக்கொலை கலாச்சாரத்தில் 15 செக்கண்டுக்கு ஒரு மனித உயிரை பலிகொடுத்தனர். பல நூற்றுக்கான இரத்தப்பலி கேட்கும் தேவதேவதைகளை, இரத்தம் கொட்டித் தொழுதனர்.

1519ல் ஸ்பானியர் மன்னனைத் தோற்கடித்து, நாடுகடத்தி, நரபலியை சட்டம்போட்டு நிறுத்தினர். நரபலி நிறைந்த, மனித இரத்தம் ஆறாய் ஓடிய, துர்நாற்றம் வீசிய கோவில்களைத் தரைமட்டமாக்கினர். குற்றமற்ற இளம் பெண்கள், குழந்தைகள், நிரபராதிகளின் இரத்தத்தை பெருவாரியாகக் கேட்டு வாங்கிக் குடித்தவன் சாத்தான் லூசிபரும் அவனது சைனியங்களுமே என்பது ஸ்பானிய போர்வீரருக்கு விளங்கத் தொடங்கியது.

தன் அழிவின்முன் ரோமாபுரியின் நாகரீக உச்சநிலை போன்று, அஸ்ரெக் நாகரிகமும் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. மிசனரிகள், ஆலயங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் சிலுவையின் அடையாளத்தைத் தாங்கி எழுப்பப்பட்டன. யூவான் சுமார்கா என்னும் துறவியை முதல் ஆயராக புதிய நாட்டிற்கு ஏற்படுத்தினர். இவர் மக்கள் மத்தியில் அச்சகங்கள், நெசவாலைகள், புதிய வகை உணவுப் பயிர்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார்.

யேசுவின் நற்செய்தியை அறிவித்து, அவர் பக்கமாக மக்களை மனந்திருப்பி புனிதராக வாழ அழைத்தார். அவர்களோ தங்கள் பழமையின் கட்டுக்கள், தடைகளுக்குள் சிக்கி, மீளமுடியாது தவித்தனர். ''எங்களுக்கு ஆன்மா இல்லை'' என்று சொல்லி யேசுவை ஏற்க மறுத்தனர். இக் கட்டத்தில்தான் ஆயர், தேவதாயிடம் திரும்பி, உருக்கமாக செபித்தார்.

''அன்னையே! நீர்தான் இறங்கிவர வேண்டும் . ... என்னால் ஒன்றும் செய்ய இயலாது ..... உமது இணக்கத்தை எண்பிக்க ஒரு அடையாளத்தை எனக்குக் காட்டுவீராக ... ஸ்பானிய நாட்டில், கஸ்ரில்வோவில் வளரும் ரோசாப் பூக்களை அனுப்புவீராக'' என உருக்கமாகப் பிரார்த்தித்தார். மெக்சிக்கோவில் அக்காலத்தில் அவ்வகை ரோசாக்கள் கிடையாது.

1525ல் இளவரசி பப்பன்ரிசின், கிறிஸ்தவள் ஆனாள். அவளே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்த முதல் மெக்சிக்கோப் பெண், அவளுடன் யேசுவை ஏற்றுக்கொண்ட வேறொரு மெக்சிக்கோவின் ஏழைக் குடும்பம், யுவான்டியாகோ, மனைவி மரியலூசியா, மாமன் யுவான் பேர்னடினோ என்போர். இவர்கள் திருப்பலியில் பங்குபற்ற பதினைந்து மைல்கள் நடந்து 'தலத்தேலோக்கோ'விலுள்ள பிரான்சிஸ்கன் மடத்துக் கோயிலுக்குச் செல்வர். திருப்பலி, தேவதிரவிய அனுமானங்களில் பங்குகொள்வர்.

1529ல் யுவான்டியாகோவின் மனைவி இறந்ததும், கோவிலில் இருந்து ஒன்பது மைல்களுக்கு அப்பால் இருந்த மாமன் பேர்னடினோடு தங்கி வாழ்ந்தான்.

1531 டிசம்பர் 9ந் திகதி, சனிக்கிழமை. (அன்று, 8ம் திகதிக்குப் பதில் 9ந் திகதிதான் அமல உற்பவத்திருநாள் கொண்டாடப்பட்டது.) திருப்பலியில் பங்குபெற அதிகாலையிலேயே புறப்பட்டுப் போனான் யுவான்டியாகோ. அவனுக்கு வயது 57. தெப்பயாக் மலையை அவன் அணுகியபோது (அது முன்பு, மனித இரத்தம் சிந்தி, நரபலி எடுத்த கோவில்களைக் கொண்டிருந்தது.) இனிமையான தெய்வீக பாடலின் ஓசை கேட்டது நின்றுபார்த்தான். தொடர்ந்தும் கேட்டது. வெள்ளை மேகம் ஒன்றில் இருந்து. பலவர்ண வானவில் போன்ற ஒளி விசியது.

(3ம் பக்கம் பார்க்க)

# ஒரு யூபிலியும் இரு சிறுவர்களும்

1775ம் ஆண்டு, புனித வருடத்தை முன்விட்டு, அனைத்துலகிலுமிருந்து பக்தர்கள் திரள்திரளாக நித்திய நகரமான ரோமாபுரிக்குச் சென்று திருவழிபாடுகளில் பங்குகொண்டனர்.

ரோமை நகரின் பிரதான ஆலயங்களிலிருந்து அடிக்கடி இறைமக்கள், பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டும், திருப்புகழ் மாலைகள், செபங்களை செபித்துக்கொண்டும் புனித தலங்கட்கு திருப்பவனியாகச் சென்றனர். அவ்வித ஊர்வலமொன்றுடன் எமது சிறுகதையும் தொடங்குகிறது.

குருத்துவ பயிற்சியில் ஆரம்ப பட்டமான ''அக்கோலித்து'' பட்டத்தைப் பெற்ற மூன்று சிறுவர், பீடப்பரிசாரக அங்கிகளணிந்து திருப்பவனியின் முன்னோடிகளாக சிலுவை, மெழுகுவர்த்தித் தண்டுகளைத் தாங்கிச் சென்றுகொண்டிருந்தனர். மெழுகுவர்த்தித் தண்டுகளைத் தாங்கிய சிறுவரில் ஒருவன் பெயர் ''டெல்லாகங்கா'', மற்றவன் ''காஸ்திலியோன்.''

திருப்பவனி பக்தியருட்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், டெல்லா குறும்பாக ஏதோ கூற, காஸ்திலியோன் மறுத்துரைக்க இருவர்க்குமிடையே வாக்குவாதம் உண்டாகியது. வாக்குவாதம் முற்றியபோது காஸ்திலியோன் தனது கையிலிருந்த பித்தளை மெழுகுவர்த்தித் தண்டினால் டெல்லாகங்காவின் தலையிலோங்கி அடித்துவிட்டான்.

டெல்லாவின் தலையிலிருந்து குருதி பெருக, மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். காயம் விரைவில் குணமடைந்ததாயினும் தலைமண்டையில் ஒரு சிறுவிக்கம் உண்டாகி, சிறு கட்டியாக நிலைத்துவிட்டது.

கால ஓட்டத்தில் ஐம்பது ஆண்டுகள் கடந்தன. 1825ம் ஆண்டு புனித வருடத்தின் தொடக்க வழிபாடுகளில் பங்குகொள்ள மக்கள் வெள்ளம் புனித இராயப்பர் மகாலயத்தின் சதுக்கத்தில் அலைமோதியது. திருத்தந்தை பன்னிரண்டாம் சிங்கராயர் பாப்பிறை, ஆடம்பர பவனியாக வந்து புனித கபாடத்தின் முன் நின்றார்.

புனித ஆண்டின் தொடக்க விழாவின் போது, புனித இராயப்பர் மகாலயத்தின் எல்லாக் கதவுகளும் மூடப்பட்டிருக்கும். பாப்பரசர் புனித கபாடத்தின் முன் சென்று, வெள்ளிச்சுத்தியலினால் கதவில் மூன்று முறை தட்டி, ''நீதியின் கதவே திறவாய்'' எனப் பாட, கபாடம் திறக்கப்படும். அவ்வழியாக முதலில் பாப்பரசரும் பின் இறைமக்களும் ஆலயத்தினுள் செல்வர். புனித ஆண்டின் முடிவில் பாப்பரசரால் இப்புனித கபாடம் மூடப்படும்.' அடுத்த யூபிலி ஆண்டுவரை அது மூடப்பட்டேயிருக்கும்.

தலைமைக் கருதினாலாண்டகை, சிரம் தாழ்த்தி பாப்பரசரை வரவேற்று வெள்ளிச் சுத்தியலொன்றை அவரிடம்கொடுத்தார். வெள்ளிச் சுத்தியலைக் கையேற்ற திருத்தந்தை புன்முறுவலுடன் மெதுவாக கூறினார்.

''சகோதரரே! முன்பு ஒரு புனித ஆண்டின்போது, மெழுகுவர்த்தித் தண்டினால் ஒரு அன்பளிப்புத் தந்தீர். எனது தலையிலுள்ள சிறுகட்டி, அந்நிகழ்ச்சியை நினைவூட்டுகிறது. இன்று வெள்ளிச் சுத்தியலை அன்பளிப்புச் செய்கிறீர்.''

கால ஓட்டத்தில் சில ஆண்டுகள் உருண்டோடின. திருத்தந்தை பன்னிரண்டாம் சிங்கராயர் டெல்லாகங்கா இறைவனடி சேர்ந்தார். புதிய பாப்பரசராக தலைமை கருதினால் காஸ்திலியோன் ஆண்டகை தெரிவு செய்யப்பட்டார். எட்டாவது பத்திநாதர் என்ற நாமத்துடன் திருச்சபையை ஆளுகை செய்தார்.

ஆகவே குறும்புக்காரச் சிறுவனோ, குழப்படிகாரப் பையனோ, கால ஓட்டத்தில் எவ்விதம் மாறுவானென்பதை முன்கூட்டியே கூற முடியாதல்லவா? ●

---

## மெக்சிக்கோவில்..

(2ம் பக்க தொடர்)

தேவகானம் நின்றதும், ஒரு இனிய பெண்குரல், ''யுவனிற்றோ, யுவனிற்றோ'' யுவான்டியாகோ என அழைத்தது. பயம் நீங்கியது 130 அடி பிரமிட் கோவில் உச்சிக்கு விரைந்தான். அங்கே அவனுக்கு நேர்முன்பாக அழகான பெண்ணொருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவளது ஆடை, சூரியனைப் போல் பிரகாசித்தது. அவள் 14 வயது, மதிக்கத்தக்க இளம் பெண். யுவான்டியாகோவை அன்பும் அமைதியும் ஆட்கொள்ள, அவள்முன்சென்று முழங்காலில் வீழ்ந்தான்.

''என் மகனே! யுவானிற்றோ எங்கே செல்கிறாய்?'' என்று கேட்டாள். ''தியாதெல்லோக்கோவுக்கு, திருப்பலியில் பங்குகொள்ளச் செல்கிறேன்'' என்றான்.

அவள் புன்முறுவல் பூத்தாள், என் அருமை மகனே! நானே பூரண, நித்திய கன்னிமரியாள், உண்மை இறைவனின் தாய், அவரால் எல்லாம் வாழ்கின்றன. அவரே எல்லாவற்றிற்கும் ஆண்டவர் வானத்திற்கும் பூமிக்கும் அதிபர். இவ்விடத்தில் எனக்கு ஓர் ஆலயம் கட்டப்படவேண்டுமென விரும்புகிறேன். இங்கு நான் மக்களுக்கு என் முழு அன்பை, இரக்கத்தை, உதவியை, பாதுகாப்பை வழங்குவேன். நான் உன் இரக்கமுள்ள தாய். இம்மண்ணில் ஒற்றுமையாக வாழும் எல்லோரினதும் தாய். முழு மனுக்குலத்தினதும் தாய். என்னை அன்பு செய்கிறவர்களின் தாய், என்னைப் பார்த்து அழுகிறவர்களின், என்னில் நம்பிக்கை வைத்திருக்கின்றவர்களின் தாய். இங்கு நான் அவர்களின் துன்பங்களையும், அழுகைக் குரலையும் கேட்பேன். அவர்களது துயர்களை ஆற்றுவேன். தேவைகளைப் பூர்த்தி செய்வேன்.''

''ஆகவே என் திட்டத்தை நிறைவு செய்ய மெக்சிக்கோ ஆயரிடம் சென்று, நீ கண்டதையும் கேட்டதையும் சொல். நான் கேட்டதை கரிசனையுடன் நிறைவேற்றுவாயாகில் உனக்கு நன்றியுடையவளாகவும் பிரதிபலன் அளிப்பவளாகவும் இருப்பேன். நான் கூறியதை நிறைவேற்று'' என்றாள். யுவான் வணக்கத்துடன் ''பரிசுத்தமானவளே! நீர் கூறியபடி செய்வேன். என்னால் இயன்றவரை முயற்சிப்பேன்'' என விடையளித்தான்.

ஆயர் இல்லத்தில் யுவான், மணித்தியாலக் கணக்கில் காத்து நின்று கடைசியாக சந்தித்தான். ஆயர் அவன் கூறியதை பொறுமையுடன் கேட்டார். ''முன்பு அஞ்ஞானதேவதைக்கு கோவில் இருந்த இடத்தில், தேவதாய் ஏன் காட்சி கொடுக்க வேண்டும்? நான் யோசித்துப் பார்க்கிறேன்'' என்று சொல்லி அவனை அனுப்பினார்.

(வளரும்)

# கிறிஸ்தவ ஐக்கியம் ஆவியின் செயல்பாடு

கிறிஸ்தவ ஒன்றிப்பு, 2ம் வத்திக்கான் சங்கத்தின் அழைப்பு. அதுபற்றி கத்தோலிக்க திருச்சபையில் அக்கறை காட்டுவோர் சொற்பப்பேரே. சிலருக்கு அதைப்பற்றிப் பேசவே பயம். இருந்தும் அது அவசியமான ஒரு திருச்சபைத் தேடல் என சங்க ஏடுகள் கற்பிக்கின்றன.

''எல்லாரும் ஒன்றாக இருப்பார்களாக! தந்தையே! நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாயிருப்பார்களாக.''

(யோவா. 17 : 21)

இன்று கிறிஸ்தவ ஒன்றிப்பு தேடல் பற்றி அக்கறை காட்டும் அமைப்பு பெற்ற ''பாரம்பரிய'' சபைகள் (500 வருட) ஆன்மீக பலங் குன்றியது போன்று, சபை அங்கத்தவர்களை அன்றாடம் பெருக்கும் சிறிய அடிப்படைவாத சபைகளுக்கு இழந்துவிடுகின்றன. இருந்தும் எமமை கிறிஸ்துவின் ஒற்றுமைக்குள் கொண்டுவர எத்தனிக்கும் பரிசுத்த ஆவியின் செயல்கள் பல விசித்திரமான வழிகளில் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

கடந்த 1998 தவக்கால செய்திக்கு எங்கள் வியாழன் செபக்குழுவில் தென்னாபிரிக்காவில் அச்சிடப்பட்ட ''மனிதனுடைய இருதயம்'' என்ற 10 நல்ல படங்கள் அடங்கிய நூல் ஒன்றினைப் பாவித்தோம். சிலர் ஆச்சரியத்துடன் ''இது பெந்தகோஸ்தே சபையினரால் பாவிக்கப்படும் நூல். நீங்கள் ஏன் இதை பாவிக்கிறீர்கள்'' என்றனர். ''இது 1732ல் பிரான்ஸ் தேசத்தில் கத்தோலிக்க திருச்சபையால் முதலில் தயாரிக்கப்பட்ட நூல்'' என்று நான் கூறியும் அவர்கள் நம்பவில்லை.

நாற்பது ஆண்டுகள் கத்தோலிக்க ஆசிரியராக கடமையாற்றியதுடன் பாதுகாவலனுக்கும் நீண்டகாலம் எழுத்துப் பணி புரிந்து தற்போது தேவதாயின் அணியில் தொண்டுசெய்யும் ஒருவர், 1937ல் தான் முதல் நன்மை பெற்றபோதும், பின்னர் 1939ல் உறுதி பூசுதல் பெற்றபோதும், ''சத்தியவேத சித்திர விளக்கம்'' என்ற பெயரில், இதுபோன்ற படப்புத்தகம் பங்குத் தந்தையால் காட்டி விளங்கப்படுத்தப் பட்டது என்று கூறுகிறார்.

1946ல் நான் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் படித்தபோது வண. சந்தியோகு சுவாமி, பாடசாலை அதிபர் சகோதரி ஏணஸ்ரின், சகோதரி சான்டோனா ஆகியோர் முதல் பாவ சங்கீர்த்தன முதல்நன்மை வகுப்புகளிலும் பின்பு உறுதிபூசுதல் வகுப்புகளிலும் கற்பித்தபோது இது போன்ற படங்களுடன் ஒரு புத்தகம் பாவிக்கப்பட்டது. எனவே இதை எடுத்து விளக்கினாலும் என்னைக் கேள்விகேட்டவர்கள் நம்பத் தயாராயில்லை.

எப்படி அவர்கள் விளங்குவது? எல்லாம் சபைகளில் தலைகீழாக நடக்கும் போது? கிளிப்பிள்ளைப்பாடம். இரண்டு கதை, மூன்று பாடல், நான்கு சிரிப்பு–உடுப்பு, செலவு, ஆடம்பர விருந்து, ஸ்பீக்கர் பொக்ஸ் உடன் பேய்க்கூத்து–இதயம் என்னபாடோ?

கத்தோலிக்கர் கைவிட்டதை மீள மொழிபெயர்த்து 200 உலக மொழிகளில் (ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய மொழிகளில்) ''ஆவிக்குரிய இதயக் கண்ணாடி'' என்ற பெயரில் தென்னாபிரிக்க சுவிசேஷ சங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. அதை யாரும் பாவிக்கலாம்.

நாம் வேதாகமத்தை 1600 ஆண்டுகட்கு மேலாக பத்திரமாக பாதுகாக்க, லூதர் கல்வின் முதலியோர் அதை மக்கள் மத்தியில் பிரபல்யமாக்க -- நாம் அதைக் கைவிட, ஏனைய கிறிஸ்தவர்கள் அதைப் பெரும் பொக்ஷமாக மதித்து, மனனம் செய்து, வீதி எங்கும் முழக்கி வாழ, பெர்க்மான்ஸ் அழகான இசையிலும் முன்னாள் மந்திரவாதி அடியான் தொண்டன்னா பாக்கியநாதன் ''அல்லேலூயா ஆனந்தமே'' என்று பாடி உலக வீதிவலம் வர, நாம் என்ன செய்கிறோம்?

வேதாகமத்துக்கு தீப, தூப, மலரஞ்சலிசெய்து ஆரத்தி எடுத்து ஆலயத்திலும் இல்லத்திலும் உயர்மேடை அந்தஸ்துக் கொடுத்து பத்திரமாக மூடி வைத்து விடுகிறோம். தினசரி ஒரு பக்கமாக வாசிப்பதோ வாசித்ததை வாழ்வதோ கிடையாது. வாழ்வு ? வேறு கதை.

28 யூன் 1998ல் கொழும்பிலிருந்து வெளியாகும் கத்தோலிக்க தூதன் ஆங்கில வார இதழில் (The Catholic messenger) ''ஆசிரியருக்கு கடிதங்கள்'' என்ற பகுதியில் முன்பு தென்னிலங்கையில் பிரபல்லிய மிசனரியாக பணியாற்றிய வண. பிதா பியோ சம்பா (யேசு சபை) கேனியாவில் இருந்து எழுதிய கடிதத்தின் சுருக்கமாவது:–

''1932ம் ஆண்டில் இத்தாலிய நாட்டில் என்னை முதல்நன்மைக்கு ஆயத்தப்படுத்திய அருட்சகோதரிகள் பல படங்கள் நிரம்பிய இந்த நூலைப் பாவித்து பரிசுத்த ஆவி குடிகொள்ளும் இதயத்திற்கும் அசுத்த ஆவி குடிகொள்ளும் பாவ இதயத்துக்கும் உள்ள வித்தியாசத்தை என் பிஞ்சு மனதில் ஆழமாக இருத்தினர்.'' இதன் முதல் நூல் 1932ல் பிரான்ஸ் தேசத்தில் கத்தோலிக்க திருச்சபையால் வெளியிடப்பட்டது.''

''நான் சூடானுக்கு 1983ல் வந்தபோது இந்நூலைக் கண்டு மகிழ்சியடைந்தேன். 1987ல் கேனியாவுக்குச் சென்றபோது இதன் பிரதி ஆபிரிக்க மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதைக் கண்டேன்'' என்கிறார்.

பதின்மூன்றாம் சிங்கராய பாப்பிறை, 1897 மே மாதத்தில் எழுதிய சுற்றுமடலில் ''எம் உள்ளங்களில் வாழும் பரிசுத்த ஆவியின்'' அவசியத்தை வற்புறுத்துகிறார். பரிசுத்த ஆவியின் ஆண்டாகிய 1988ல் 2000ம் யூபிலிக்கு ஆயத்தம் செய்ய- நல்லதொரு சிறு நூலும் படங்களும் என யாழ் மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழு கருதுகிறது.

ஆமேன் அல்லேலூயா! தூய ஆவியே வாரும்! வாழ்வு தரும்! ஆவியேவாரும்.

## யூபிலி ..

(1ம் பக்க தொடர்)

''உம் ஊழியரின் சடலங்களை வானத்துப் பறவைகட்கு உணவாகவும், உம் பற்றுமிகு அடியாரின் உடல்களைக் காட்டுவிலங்குகளுக்கு உணவாகவும் அவர்கள் அளித்துள்ளனர்.''

''அவர்களின் இரத்தத்தைத் தண்ணீரென எருசலேமைச் சுற்றிலும் அள்ளி இறைத்தார்கள். அவர்களை அடக்கம் செய்ய எவரும் இல்லை.''

''எங்களை அடுத்து வாழ்வோரின் பழிச்சொல்லுக்கு இலக்கானோம். எங்களைச் சூழ்ந்துள்ளோரின் நகைப்புக்கும் ஏளனத்திற்கும் ஆளாகிவிட்டோம்.''

(திருப்பா. 79 : 1 – 4)

''இக்கோவிலை இடித்து விடுங்கள். மூன்று நாளில் எழுப்புவேன்.''

(யோவா. 2 : 19)

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

அர்ச். சூசையப்பர் வியாதியாயிருந்து நன் மரணமடைந்த வரலாறு வருமாறு.-

அர்ச். சூசையப்பருக்கு வயது செல்லச் செல்ல உடற் பலவீனங்களும், அவைகளால் அதிகமான துன்பங்களும் அதிகரித்துக்கொண்டே வந்தமையால் தேவமாதா தன்னை முழுமையாக அர்ப்பணித்து அவருக்கு பணிவிடை செய்து வருவாள். அவருடைய வருத்தங்களைக் குறைத்து அவைகளைத் தனக்கு அனுப்பும்படி இறைவனிடம் மன்றாடுவாள். சூசையப்பர் பற்பல வியாதிகளினால் வேதனை அனுபவிப்பது இறைவன் சித்தமாக இருந்தபடியாலும் பிதாவின் பேறுகள் உயரும்படியாகவும் எட்டு வருடகாலம் இந்நிலை தொடர்ந்து நீடித்தது. அவளுக்கு மரணகாலம் கிட்டியதை தேவமாதா அறிந்து அவருடைய கடைசி நேரத்தில் அவரருகிலிருந்து ஆறுதல் செய்யும்படி திவ்விய இரட்சகரை வேண்டிக் கொண்டாள். திவ்விய கர்த்தரும் நான் அவருக்கு சம்மனசுக்கள் வியக்கத்தக்க முறையில் அவரைப் பரலோகத்தில் மகா ஆனந்த பாக்கியத்திலும் உயர்த்துவேனென்றார்.

அவர் இறப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன் தொடங்கி மரணம் மட்டும் தேவமாதா இரவுபகலாக அவரருகே இருந்தாள். அவர் மரணமடைய ஒன்பது நாட்களுக்கு முன் உலக இரட்சகர் ஒரு நாளைக்கு மூன்றுமுறை தேவலோகக் கீதங்களை அவருக்கிருந்த சிற்றறையிற் பாடத் தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டார். மேலும் அந்தச் சிற்றறையில் மோட்ச சுகந்த பரிமளம் வீசிக்கொண்டிருந்தது. அவர் மரணமடைவதற்கு முதல்நாளில் சுவாமியானவர் அவருக்கு அனுப்பச் சித்தமாயிருந்த இருபத்து நாலுமணி நேரப்பரவசத்தை அவர் தாங்கும்பொருட்டு அவருக்கு வேண்டிய பலத்தைக் கொடுத்தார். பரவசம் இவரை விட்டு நீங்கினவுடனே மகாபிரகாசம் பொருந்திய முகத்தோடு தமது பத்தினியின் ஆசீர்வாதத்தைக் கேட்க, பெருந்தாழ்ச்சியிலுயர்ந்த தேவமாதா தமது திருக்குமாரன் அவருக்கு ஆசீர்வாதம் கொடுக்க மன்றாடினாள். அவர் அவரை ஆசீர்வதித்தபின் இவள் முழந்தாளிட்டுத் தமது பத்தாவின் ஆசீர்வாதத்தைக் கேட்டு மிகுந்த பணிவுடன் அவர் கரத்தை முத்தமிடும்போது அவர் தேவமாதாவுக்கு செய்ததாக எண்ணிய செயல்களுக்காக அவளிடத்தில் மன்னிப்புக் கேட்டதுடன் யேசுநாதர் அவருக்குச் செய்த நன்மைகளுக்காக மிகுந்த தாழ்ச்சியுடனும் நன்றியுடனும் அவருக்கு வணக்கம் செலுத்தி தாம் முழங்காலிலிருக்க பிரயாசைப்பட்டார். யேசுநாதர் அவரைத் தமது கரத்தினாலே தாங்கினார். அப்படி அவரைத் தாங்கும்போது அவருடைய ஆத்துமம் சரீரத்தை விட்டுப் பிரிந்துபோயிற்று. யேசுநாதர் தமது கரங்களினாலே அவருடைய கண்களை மூடினார்.

அப்பொழுது அச் சிறுவீட்டிற் சம்மனசுக்கள் பெரும் ஆனந்தம் பொருந்திய கீதங்களைப் பாடும்பொழுது கர்த்தர் அவருடைய ஆத்துமத்தை பிதாப்பிதாக்கள் ஸ்தலத்திலே கூட்டிக்கொண்டு போகும்படியாகச் சம்மனசுக்களுக்குச் சொல்லியபின் அவருடைய சரீரத்தைத் தேவமாதா மொடுதார் சீலையினால் மூடினாள். சூசையப்பர் தமது வியாதியினால் அல்ல தாம் கொண்டிருந்த தெய்வ அன்பின் பெருக்கத்தினாலேயே உயிர் விட்டார். இப்படிப்பட்ட மரணம் தெய்வ அன்பின் செயலேயன்றி ஜென்மபாவத்தின் ஆக்கினையல்ல. அவர் சாகும்போது அவருக்கு அறுபது வயது. அவர் இறக்கும்போது தேவமாதாவுக்கு நாற்பத்தொன்றரை வயது. அவருடைய பேறுபலன்களையும் பரிசுத்தத் தனத்தையும் தேவமாதா அறிந்திருந்தபடியினாலேயும் அவர் தன்னை மிகவும் அன்பாக நேசித்தபடியினாலேயும் அவர் இறந்துபோனதனால் அதிக வியாகுலப்பட்டாள்.

சூசையப்பருக்கு சிறுவயதிலேயே சகல சாஸ்திரங்களும் பெரிய வரப்பிரசாதங்களும் அவருடைய இருதயத்தில் ஏகாந்த நிஷ்டையின் வரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஏழு வயதிலேயே அவர் சம்பூரணமான புனிதராக இருந்து கற்பில் பக்திச் சுவாலகருக்கு ஒத்தவராக இருந்தார். அவர் பெரும் வீரமிக்க புண்ணியங்களில் உயர்ந்திருந்தபடியினாலே அவர் உலக இரட்சகருக்கு பிதாவாக தெரிந்துகொள்ளப்பட்டார். இறைவன் அர்ச். சூசையப்பருக்கு அனேக வரங்களைக் கொடுத்தார். அதில் முதலாவது அவரைப் பக்தியோடு வேண்டிக்கொள்பவர்கள். கற்பு என்னும் புண்ணியத்திலும் பஞ்சேந்திரிய தந்திரங்களினின்றும் வெற்றியடைவார்கள். இரண்டாவது பாவத்தினின்று நீங்க விசேஷமான வரங்களைப் பெறுவார்கள். மூன்றாவது, தேவமாதாவின் பேரில் பக்தியாயிருக்க வரமடைவார்கள். நான்காவது, அவர்கள் இறக்கும் தருணத்தில் வரும் தந்திரங்களினின்று ஆதரிக்கப்பட்டு நல்ல மரணமடைவார்கள். ஐந்தாவது, வியாதிக்காரர் வியாதியாயிருப்பது தங்களுக்கு நன்மையானால் அவர்கள் ஆறுதலான சுகமடைவார்கள். ஆறாவது, அவர்கள் கலியாணம் செய்திருந்தால் தங்கள் மரணத்துக்குப்பின் தங்கள் குடும்பங்களை நடத்த வேறு மனிதர்களையுமடைவார்கள். ஏழாவது அர்ச். சூசையப்பருடைய திருநாமத்தைக் குறித்து வேண்டிக்கொண்டால் பசாசுகள் பயப்படும். இவை ஏழும் அவருக்கு கொடுக்கப்பட்டன.

சூசையப்பர் மரணமடைந்தபின் தேவமாதாவுக்கு அதிக செயலில்லாமையால் கைவேலைகளைக் குறைத்து பேரின்ப நிஷ்டையில் காலம் போக்கும்படியாக தேவமாதாவுக்கு உத்தரவாக இருந்தது. தேவமாதவின் உதவி அர்ச். சூசையப்பருக்கு வேண்டியிருந்தபடியால் நாளொன்றுக்கு இரண்டு தரம் சாப்பிட்டு வந்து, அவர் மரணத்துக்குப்பின் ஒருவேளை மாலையில் அப்பத்தை மாத்திரம் சாப்பிடுவாள். வெளிவேலைகளைக் குறைத்து இறைச்சித்தத்தை அறிய உலக இரட்சகரின் திருப்பாதத்திலே சாஷ்டாங்கமாக விழுந்திருப்பாள். அடிக்கடி அவர் கரங்களையும் பாதங்களையும் முத்தி செய்து அவருக்கு உணவு கொடுக்கும்போது முழங்காலிலிருந்துகொண்டு கொடுப்பாள். வீடு பெருக்கல், பாத்திரம் முதலானவற்றைத் துலக்கல் போன்ற வேலைகளை அவளே செய்யும்போது சம்மனசுக்கள் அவளுக்கு உதவியாக இருப்பார்கள். அவள் அவைகளைச் செய்ய வேண்டாமென்று தடுக்க சம்மனசுக்களும் கீழ்ப்படிந்து விட்டுவிடுவார்கள்.

உலக இரட்சகர் பாவிகளுடைய மனக்கடினங்களை நினைக்கும்போது அவருக்கு இரத்த வியர்வை வியர்க்கத் தொடங்குவதுடன் விடும் கண்ணீரும் இரத்தம் போலிருக்கும். இதைக்கண்ட தேவமாதாவும் இரத்தக் கண்ணீர் விட்டழுது வியாகுலத்தினால் விம்மியழுவாள். கர்த்தர் அவள் பேரில் இரக்கமாயிருந்து சம்மனசுக்களால் உன்னத தேற்றுதல் கிடைக்கும்படியாகச் செய்வார். திருச்சபையின் ஆரம்பத்தில் இரட்சகரின் அப்போஸ்தலர்கள், சீஷர்கள் இன்னும் அனேகம் கிறிஸ்தவர்கள் மோட்சத்திற்குக் குறிக்கப்பட்டிருந்ததைத் தான் கண்டு உலக இரட்சகரைப் பின் செல்லுகிறவர்களுக்காக வேண்டிக் கொள்ளுவாள்.

(வளரும்)

# வன்னியில் பட்டினிச் சாவுக்கு எதிரணி

இன்றைய நவீனப் போர்களின் இரு கரங்கள் ஆயுதமும் பட்டினியும். இவை இரண்டும் திட்டமிட்டே பாவிக்கப்படு கின்றன. சூடானில், றுவாண்டாவில் எத்தியோப்பியாவில், வன்னியில் மடி பவர்கள் பொதுமக்கள். போராட்டத்தை எதிர்ப்போர் பட்டினியையும் நிறுத்த முன்னிற்க வேண்டும் என்ற நம்பிக்கை யிலே தெற்கு ஆயர் மல்கம் றஞ்சித்தும் ஆயர்கள் தோம்ஸ்சவுந்தரநாயகம், இராயப்பு யோசவ் ஆகியோர் உண்ணா விரதிகளிடம் விரைந்துள்ளனர். இவர் களுடன் தோளோடு தோள்கொடுத்து நிற்பது நம் கடமை.

# பெருகப்போகும் 3ம் மிலேனிய வேத சாட்சிகள்

3ம் மிலேனியம் வேதசாட்சிகளின் யுகம். அதன் முன் எதிரொலி கள் இன்றே கேட்கின்றன என்பது உலகப்பூராக 1997ம் ஆண்டில் கொல்லப்பட்ட கத்தோலிக்க குருக்கள் மிசனரிகள் பட்டியல் எடுத் துக் காட்டும். எம் மண்ணிலும் போதியளவு குருக்கள் துறவியர் இருந்தும் இரத்த சாட்சியம் நிறைந்த மிசனரிகள் அதிகரிக்க தூய ஆவியை வேண்டுவோம்.

''ரோமன் அவதானி தரும் வேதசாட்சிகளின் பட்டியல்''
(டிசம்பர். 30)

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | 15 | தை | சாட் | கிறிஸ்ரின் |
| 2) | 22 | தை | கேனியா | லரிரிமன் |
| 3) | 2 | மாசி | றுவாண்டா | கைபினாட் |
| | | | | (திருப்பலியில் நற்கருணை கொடுக்கும்போது.) |
| 4) | 4 | மாசி | சோலோதிவுகள் | பென்சமின் டியேசு. |
| 5) | 17 | மாசி | நைஜீரியா | நாகேசி இசிடி |
| 6) | 25 | மாசி | சயீர் | அன்ரனீஸ் கற்றகேமானா |
| 7) | | | | இம்மானுவேல் முனியகா |
| 8) | | | | ஜீன் வெசியமானா |
| 9) | | | | றொபட் முவிளோ உபோனா |
| 10) | | | | மிகலோ பிரான்சிஸ் சேவியர் முயபோக் |
| 11) | | | | உர்பர் ருவாக்கியேசு |
| 12) | | | | எற்னி கபேரா |
| 13) | | | | அகுஸ்தின் நிக்குளிகியுமிகிஸ்ஸா |
| 14) | | | | பெலிசிற்றா முக்கமின்கோகோ |
| 15) | | | | குளேறில்டா நிராபக்குண்டு |
| 16) | | | | மாரி பிராசின் நிராறிகுண்டு |
| 17) | 25 | பங்குனி | சயர் | டானியேல் படியாலி மசிறோனி |
| 18) | 28, 29 | ஏப்ரல் | (இரவு) | 40 குருமட மாணவர்கள் |
| 19) | 29 | ஏப்ரல் | ருவாண்டா | கிரிஸ் பொஸ்மன் |
| 20) | 03 | மே | புறூண்டி | குனேடின் ஜேர்மேயன் புச்வோல்ட் |
| 21) | 11 | மே | ருவாண்டா | இசாய கபக்குராமா |
| 22) | | | | பாஸ்கல் இறிவகான்டி |
| 23) | 24 | ஒக்டோபர் | இந்தியா | தொமஸ் அஞ்சனிக்கல் |
| 24) | 03 | நவம்பர் | பராகுவே | சிரோ மாட்டினஸ் |
| 25) | 23 | நவம்பர் | இந்தியா | யேசே நெடுமத்தித்தில் |
| 26) | 08 | டிசம்பர் | கொலம்பியா | சாமுவேல் கல்டேறன் |
| 27) | 14 | டிசம்பர் | நேபாளம் | தொமஸ் காப்பினி |

''எழுந்து, கடவுளின் கோவிலையும் பலிபீடத்தையும் அளவிடு; அங்கு வழி படுவோரைக் கணக்கிடு. நான் என் சாட்சிகளுள் இருவரை அனுப்புவேன். அவர்கள் சாக்கு உடை உடுத்தி ஆயி ரத்து இருநூற்று அறுபது நாளும் இறை வாக்குரைப்பார்கள்.''

''அவர்கள் சான்று பகர்ந்து முடித்த பின் படுகுழியிலிருந்து வெளியே வரும் விலங்கு அவர்களோடு போர் தொடுத்து அவர்களை வென்று கொன்றுவிடும்.

சோதோம் எனவும் எகிப்து எனவும் உருவகமாக அழைக்கப்படும். அம்மாநக ரின் தெருக்களில் அவர்களுடைய பிணங் கள் கிடக்கும். அங்கேதான் அவர்களின் ஆண்டவர் சிலுவையில் அறையப்பட் டார்.''

திருவெளிப்பாடு. 11; 1, 3, 7 - 8)

இந்த இதழில்.....

ஆசிரியருரை
தேவதாய் காட்சி
யூபிலிச் சிறுவர்
கிறிஸ்தவ ஐக்கியம்
மரியாள் பரவச இயல்
வன்னிப் பட்டினி
3ம் மண்டல வேதசாட்சிகள்

அடுத்த இதழில்.....

**3ம் மண்டல திருச்சபை வரலாறு**

(ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா)

Print : "Annai printers", Jaffna
Published by PAX CHRISTI.
St JOSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna